# ஆய்விற்கான தரவு சேகரிப்பில் கூகிள் படிவங்களின் (Google Forms) பயன்பாடு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு

# Google forms Utilization for data collection of research: with special reference to the undergraduates of South Eastern University of Sri Lanka

M.A.F. Ashfa[1], A. Ijas Mohamed[2], M.S. Zunoomy[3], F.H.A. Shibly[4]

[1] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

[2,3&4] Department of Arabic language, South Eastern University of Sri Lanka

ashfaansar6@gmail.com, ijasajeen@gmail.com, zunoomyzain94@gmail.com, shiblymis@gmail.com

**ஆய்வு சுருக்கம்:**

இன்றைய காலகட்டத்தில் கருத்துக்கணிப்பிற்காக கல்வி, ஆய்வு, பொருளாதாரம், அரசியல், சமூகம் என்ற அனைத்து துறைகளிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டு முடிவுகள் பெறப்படுகின்றன. அந்தவகையில் இலகுவான முறையில் குறுகிய நேரத்திற்குள் நேர விரயமின்றி தரவு சேகரிப்பு வழியாக கூகுள் படிவங்கள் காணப்படுகின்றன. இந்தவகையில், கூகிள் படிவங்களை பூர்த்தி செய்வது தொடர்பான பல்கலைக்கழக மாணவர்களின் மனோநிலையை அடையாளப்படுத்துதல். இவ்வாய்விற்காக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 220 மாணவ, மாணவிகள் எழுமாறாக ஆய்வு மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர். முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து மற்றும் அவதானம் மூலமும், இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், இணையக் கட்டுரைகள் என்பன மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் கூகுள் போம் தரவுகள் சேகரிப்பிற்கு ஒரு சிறந்த வழிமுறை எனக்குறிப்பிட்டு ஓரளவான நம்பகத் தன்மையான தரவுகள் கிடைக்கப்பெறுகின்றன என நம்புகின்றனர். அதேநேரம் சிலர் கூகுள் படிவங்களை ஆர்வத்துடனும் இன்னும் சிலர் பொடுபோக்காகவும் விருப்பமின்மையுடனும் பூரணப்படுத்துகின்றார்கள் என்பதையும் இவ்வாய்வு அடையாளப்படுத்தப்படுகின்றது. மேலும் தரவுகள் சேகரிப்பிற்கு கூகுள் படிவத்தை விட நேரடியாக பதிலளிப்பதே திருப்தியான மனநிலையை தருகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் தற்போதைய சூழ்நிலைகளின் காரணமாகவும், இலகுவாக, விரைவில் தரவு சேகரிப்பிற்கு கூகுள் படிவங்கள் மூலம் பதிலளிப்பதை திருப்தியாகவும் உணர்கின்றனர் என்பன இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவு சொற்கள்:** கூகுள் படிவங்கள், ஆய்வு, தரவுசேகரித்தல், கணக்கெடுப்பு

**ஆய்வு அறிமுகம்:**

தரவு சேகரிப்பு நோக்கங்களுக்காக படிவங்களை உருவாக்குகின்ற இணையவழி செயலியாக கூகுள் படிவங்கள் காணப்படுகின்றன (சிவசேகர், 2019). கூகிள் படிவங்கள் (Google Forms) என்பது கூகிள் வழங்கும் இலவச இணைய அடிப்படையிலான கூகுள் டாக்ஸ் எடிட்டர்ஸ் (Google docs editors) தொகுப்பின் ஒரு பகுதியாகும். இது ஒரு கணக்கெடுப்பு மென்பொருளாகும். இந்த சேவையில் கூகிள் டாக்ஸ் (Google Docs), கூகிள் ஷீட்கள்

(Google sheets), கூகிள் ஸ்லைடுகள் (Google slides), கூகிள் வரைபடங்கள் (Google maps), கூகிள் தளங்கள் (Google sites) மற்றும் கூகிள் கீப் (Google keep) ஆகியவை அடங்கும். கூகிள் படிவங்கள் ஒரு வலை பயன்பாடாக மட்டுமே கிடைக்கும். Google form ஆனது ஒரு கணக்கெடுப்பொன்றை கணிப்பதற்கும், அதனுள் திருத்த வேலைகள் (edit) செய்வதற்கும் உதவுகிறது. மேலும் இதனுள் சேகரிக்கப்பட்ட தகவல்கள் தானாக ஒரு விரிதாளில் பதியப்படும் (“Google”, n.d.).

மேலும் கூகிள் படிவங்களின் பயன்பாடுகள் பல காணப்படுகின்றன. அவற்றில், பயனாளர்களுக்கு ஏற்றாற்போல் நேர்த்தியான படிவங்களை உருவாக்க முடிவதுடன், கூகிள் படிவங்களை பயன்படுத்தி இலவசமாக சிறிய, பெரிய அளவிலான தகவல்களை சேகரிக்க முடியும். தேவையான பதில்களை விரைவாகப் பெறலாம். கருத்துக் கணிப்புகளை உருவாக்கலாம். பயனர்களுடைய மின்னஞ்சல் முகவரிகளை இலகுவான முறையில் சேகரிக்கலாம். அத்தோடு வினாக்கொத்துக்களை உருவாக்கலாம். விரும்பியவாறு வினாக்கொத்துக்களை வடிவமைத்துக்கொள்ள முடிவதுடன், விருப்பப்படி கேள்விகளையும், பதில்களை தெரிவு செய்யும் முறையையும் தேர்வு செய்து கொள்ளலாம். அதேபோல் உடனடியாக படிவங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதால் பயனாளர்களுக்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்துக் கொள்ளலாம். அத்துடன் கிடைக்கப்பெறும் பதில்கள் பார்வைக்கு இலகுவாக அனைத்து தரவுகளையும் ஒரு சேர தொகுத்து ஒரே விரிதாளில் பார்வைக்கு தரும். தனியாக மாத்திரம் இன்றி கூட்டாகவும் ஆவணம், விரிதாள் மற்றும் ஸ்லைடு போன்ற தயாரிப்புகளை உருவாக்கலாம் (விக்கிபீடியா, தி.இ.). இவ்வாறு அனுப்பப்படுகின்ற கூகிள் படிவங்களுக்கு ஸ்மார்ட் போன், கணினி ஊடாக என மிக இலகுவாக பதிலளிக்க முடியும் (சிவசேகர், 2019).

**ஆய்வுப் பிரச்சினை:**

ஒரு சிறந்தவொரு ஆய்வை மேற்கொள்வதற்கு முதல் நிலைத் தரவுகளில் வினாக்கொத்து, நேர்காணல், கலந்துரையாடல், அவதானம், ஆழமான கலந்துரையாடல் போன்றன பிரதானமாக பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் வினாக்கொத்து ஆய்வாளர்களினால் பரலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குறித்ததொரு ஆய்வில் கண்டறிய வேண்டியவைகளை அனுமானமாகக் கொண்டு வினாக்களைத் தொகுத்து நேரடியாகவே ஆய்வுக்காக தெரிவுசெய்யப்பட்டவர்களின் கொடுத்து பூரணப்படுத்தி பெற்றுக்கொள்கின்ற வழமை காணப்பட்ட அதேவேளை, இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, ஒன்லைன் மூலமாக தரவு சேகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, கொரோனா பரவலின் பின் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளுக்கான தரவுகள் கூகிள் படிவங்கள் மூலமாகவே பெற்றுக் கொள்ளப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, பல்கலைக்கழகங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் முழுமையாக கூகிள் படிவங்களில் சார்ந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதன்போது, ஆய்வு மாதிரிகளாக தெரிவுசெய்யப்படுகின்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு கூகிள் படிவங்கள் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. இவ்வாறு, அதிகரித்துவிட்ட

கூகிள் படிவங்களின் பிரயோகத்தினால் தரவுகளை வழங்குபவர்களின் நிலைப்பாடு பொடுபோக்காக மாறிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இந்த ஆய்வுப் பிரச்சினையை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்:**

கூகிள் படிவங்களை பூர்த்தி செய்வது தொடர்பான பல்கலைக்கழக மாணவர்களின் மனோநிலையை அடையாளப்படுத்துதல்.

**ஆய்வு முக்கியத்துவம்:**

இன்றைய கால கட்டத்தில் தொழிநுட்ப வளர்ச்சியின் பயனாக கூகுள் படிவங்கள் மூலம் வினாக்கள் கேட்கப்பட்டு பூரணப்படுத்தும் முறை காணப்படுகின்றது. தற்காலத்தில் அனைத்து துறைகளிலும் தரவுகளை இலகுவாக பெற்றுக்கொள்ள கூகுள் படிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், அதிகரித்த பாவனையினால் ஆய்வு மாதிரிக்காக தெரிவுசெய்யப்பட்டவர்கள் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் அதனை பூரணப்படுத்துவதில் இருந்து கவனயீனமாக காணப்படுகின்றனர். இதன்காரணமாக, ஆய்வுகளுக்கு தரவு சேகரிக்கும் போது போதியளவான தரவுகளைப் பெற்றுக்கொள்வதில் ஆய்வாளர்கள் சிரமங்கொள்கின்றனர். இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமாயின், ஆய்வு மாதிரிக்காக பெரும்பாலும் உட்படுத்தப்படுகின்ற பல்கலைக்கழக மாணவர்களின் மனோநிலையை அறிந்து கொள்வது அவசியமானதாகும். இதன்போது, கூகிள் படிவங்களை பூர்த்தி செய்து பெற்றுக்கொள்வதற்கான யுக்திகளை பிரயோகிக்க முடியம்.

**ஆய்வு முறையியல்:**

இவ்வாய்வானது பண்பு ரீதியிலான விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகின்றது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, அவதானம் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டன. இவ்வாய்வில் வினாக்கொத்து எழுமாதிரியாக தெரிவுசெய்யப்பட்ட இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அனைத்து பீட மாணவ, மாணவிகள் 220 பேருக்கு வழங்கப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுகள், கட்டுரைகள், இணைய கட்டுரைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டன.

**இலக்கிய மீளாய்வும் ஆய்வு இடைவெளியும்**

கல்விசார் செயற்பாடுகளில் கூகிள் படிவங்கள், கலாநிதி ஆர். சிவகுமார் (2019) மேற்கொண்ட ஆய்வில் கூகிள் படிவங்கள் பாடசாலை மட்டத்தில் பயன்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடுகின்றார். மாணவர்களும் ஆசிரியர்களும் கணக்கெடுப்புகள், கேள்வி-பதில் போட்டிகள், நிகழ்ச்சிகளுக்கான பதிவுத்தாள்களை ஒழுங்கமைத்தல் போன்ற பல நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியும் என முன்மொழிகின்றார். பாடசாலை மட்டத்தில்

கணக்கெடுப்புகளை மேற்கொள்ள பிற ஊழியர்களுடன் சேர்ந்து பணியாற்றுவது தொடர்பான வழிகாட்டல்கள் பற்றி இவ்வாய்வு பேசுகின்றது.

கூகிள் படிவங்களை பயன்படுத்துவதிலுள்ள ஆக்கபூர்வத் தன்மை, ஏன்டாஹ் சாறி, உஸ்மான், அப்துல் ஹகீம் (2019) மேற்கொண்ட ஆய்வில் பாடசாலைகளில் மாணவர்களுக்கிடையில் கற்பித்தலை மேம்படுத்துவதற்காக கூகிள் படிவங்களைப் பயன்படுத்துவது தொடர்பான ஆராயப்பட்டுள்ளது. ஓப்பீட்டு அடிப்படையில் மாணவர் குழுக்களுக்கிடையில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் திருப்திநிலை மதிப்பீட்டிற்காக கூகிள் படிவங்களின் பயன்பாடு, என்டாஹ் மற்றும் ரிஸ்ஸா (2019) மேற்கொண்ட ஆய்வில் முஹம்மதிய்யா தஸிக்மலயா பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் பாடநெறி தொடர்பான திருப்தி நிலையை மதிப்பிடுவதற்காக கூகிள் படிவம் வாயிலான இணைப்பு அனுப்பப்பெற்று தகவல்கள் சேகரிக்கப்பட்டமை குறித்து ஆராயப்படுகின்றது. கூகிள் படிவத்திற்கான இணைப்பு அனுப்பப்பட்ட போது மாணவர்கள் தங்களின் திருப்திநிலையை காத்திரமாக தெரிவித்ததாக இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.


கற்பித்தல் நெறிகளை அறிவிப்பதற்காக கூகிள் படிவங்களைப் பயன்படுத்துதல், குயான், ஸ்ரோஹ்ர், ஈஸென்ரிச், அன் (2009) மேற்கொண்ட ஆய்வில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக தரவுகளை சேகரிப்பது தொடர்பாக ஆராய்கின்றது. இதன்போது, கூகிள் படிவங்களைப் பயன்படுத்துவது எவ்வாறு என்பதையும் வழிகாட்டுகின்றது.

மேற்கூறப்பட்ட ஆய்வுகள் கூகிள் படிவங்கள் தொடர்பாகவும், பாடசாலை மட்டத்தில் கல்விசார் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவது பற்றியும், மதிப்பீடுகளை பெற்றுக்கொள்ளவும் பயன்படுத்துவது தொடர்பாக ஆராய்கின்றது. எனினும், இவ்வாய்வானது கூகிள் படிவங்களை பூர்த்தி செய்வதில் பல்கலைக்கழக மாணவர்களின் மனோநிலையை மையப்படுத்தி ஆராய்வது ஆய்வு இடைவெளியை கவனித்து மேற்கொள்ளப்படுவதாக அமைகின்றது.

**தரவுப்பகுப்பாய்வும் கலந்துரையாடலும்:**


கூகிள் படிவங்கள் தொடர்பாக எவ்விதமான மனநிலையை பல்கலைக்கழக மாணவர்கள் கொண்டுள்ளனர் என்பதனை எழுமாறாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 220 பேர்களால் வினாக்கொத்து பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாய்வு தொடர்பான வினாக்கொத்தை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தில் 78.8% ஆனவர்களும், 17.1% ஆனவர்கள் கலை மற்றும் கலாசார பீடத்தை சேர்ந்தவர்களும், 8.2% ஆனவர்கள் முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தை சேர்ந்தவர்களும் பூரணப்படுத்தி இருந்ததுடன் ஏனைய பிரயோக விஞ்ஞான, பொறியியல், தொழிநுட்ப பீடங்களில் இருந்து 2.3% ஆனவர்களும் பூரணப்படுத்தி இருந்தனர். இதனை படம் 1 விபரிக்கின்றது.




படம் 1: பீடம்

இன்றைய காலத்தில் ஏதாவதொரு நோக்கத்திற்காக தரவுகளை இலகுவாக சேகரிக்க கூகிள் படிவங்களை பயன்படுத்துகின்றனர். கூகுள் படிவங்கள் தரவுகள் சேகரிப்பிற்கு ஒரு சிறந்த மூலமா என கேட்டறிந்த போது 57.7% ஆனவர்கள் ஆம் எனவும், 40.5% ஆனவர்கள் ஓரளவு எனவும் குறிப்பிட்டிருந்த அதேவேளை 1.8% ஆனோர் இல்லை என பதிலளித்தனர். எனவே கூகிள் படிவங்கள் தற்காலத்தில் எச்சூழ்நிலையாயினும் தரவுகள் சேகரிப்பிற்கு இலகுவான சிறந்த ஒரு மூலமாக காணப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. அதனை கீழ்வரும் படம் 2 விளக்குகிறது.




படம் 2: கூகிள் படிவம் தரவு சேகரிப்பிற்கு சிறந்த வழி

கூகுள் படிவங்கள் தரவு சேகரிப்பில் ஒரு சிறந்த வழியாக இருப்பினும் அதன் நம்பகத்தன்மையை அறிய முற்பட்ட வேளையில் சரியான, நம்பகத்தன்மையான தரவுகள் கிடைப்பதை நம்புகின்றீரா என வினாக்கொத்தின் மூலம் வினவியபோது 61.2% ஆனவர்கள்


ISBN 978-624-5736-14-0

அதாவது அதிகபட்சமானவர்கள் ஓரளவு தரவுகளின் நம்பகத்தன்மை உண்டு என்ற மனநிலையை கொண்டிருந்ததுடன் 29.2% ஆனவர்கள் முழுமையாக நம்பகத்தன்மையாக உள்ளது என்ற மனநிலையை கொண்டிருந்தனர். ஆயினும் 9.6% ஆனவர்கள் நம்பகத்தன்மையானதாக இல்லை என மறுத்தனர். அதனை பின்வரும் படம் 3 விபரிக்கின்றது.




படம் 3: சரியாக தகவல்கள் கிடைத்தல்

மேலும் கூகிள் படிவங்கள் மூலம் எதிர்பார்ப்பது போல் போதியளவு தரவுகள் கிடைக்கப்பெறுகின்றனவா என்பது பற்றி வினவப்பட்டபோது, 60.3% ஆனோர் ஓரளவு எனவும் 31.1% ஆனோர் ஆம் எனவும் 8.7% ஆனோர் இல்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். அதாவது ஒரு கருத்து கணிப்பொன்றிற்கு போதியளவான தரவுகள் முக்கியமானவை. அதனை கூகிள் படிவங்கள் மூலம் வினாக்கொத்து கொடுக்கப்படும் அனைவரிடமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் அவர்கள் வழங்கும் தரவுகள் அதாவது பதில்கள் ஓரளவு தான் போதுமானதாக உள்ளது என பெரும்பாலானோர் குறிப்பிட்டிருந்தனர். அதனை படம் 4 இன் மூலம் நோக்கலாம்.




படம் 4: போதியளவு தரவு கிடைத்தல்


ISBN 978-624-5736-14-0

கூகிள் படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட முன், தரவு சேகரிப்பாளர்கள் நேரடியாகவே தமக்கு தேவையான தரவுகளை சேகரித்தனர். ஆனால் தற்போது கூகிள் படிவங்கள் சமூகப் பயன்பாட்டிற்கு பழக்கமாகியதன் விளைவாக இலகுவாக தரவுகளை சேகரிக்கின்றனர். எனவே அன்று ஒரு முறையிலும் இன்று ஒரு முறையிலும் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. இதன் போது அவற்றுக்கிடையே ஏதாவது வேறுபாடுகளை உணர்கின்றீரா என வினவியபோது 61.4% ஆனவர்கள் ஆம் வேறுபாடுகளை உணர்கின்றோம் என்றும், 38.6% ஆனவர்கள் எவ்வித வேறுபாடுகளையும் உணரவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தனர். இதனை படம் 5 காட்டுகிறது.





படம் 5: நேரடியாகவும், கூகிள் படிவம் மூலமும் தரவு சேகரித்தல்

ஆம் எனக்குறிப்பிட்டவர்கள் பல்வேறுபட்ட வேறுபாடுகளை தங்களது மனநிலைக்கேற்ப குறிப்பிட்டிருந்தனர். அவற்றில் அதிக பட்சமானோர் எதிர்மறையான நிலைப்பாட்டையே குறித்து நின்றனர். அதாவது நேரடியாக மேற்கொள்ளும் தரவு சேகரிப்பில் காணப்படும் உண்மைத்தன்மை கூகிள் படிவங்களில் காணப்படுவதில்லை, உறுதியான, நம்பகத்தன்மையான, துல்லியமான தரவுகள் நேரடியாக மேற்கொள்ளப்படும் தரவு சேகரிப்புகளிலே கிடைக்கின்றன. கூகிள் படிவங்களில் சிலர் பொய்யான தகவல்களையும் அசட்டையான, பொடுபோக்கான பதில்களை வழங்குதல், அவற்றில் முழுமையான தகவல்களை வெளிப்படுத்த முடியாமை கொடுக்கப்படும் கேள்விகளுக்கு மாத்திரம் விடையளிப்பதால் அதிகமான தரவுகளை பெற முடியாமை, அவை நேரடியான தரவு சேகரிப்புகளிலே மேலதிக தரவுகளையும், முழுமையான தரவுகளையும் திருப்திகரமாக பெறப்பட்டது என குறிப்பிட்டிருந்தனர்.

நேர்மறையான வேறுபாடுகளாக கூகிள் படிவங்கள் மூலம் தரவுகளை, தகவல்களை சிரமமில்லாமல் இலகுவாக சேகரிக்கலாம், குறுகிய காலத்தில் தகவல்களை இலகுவாக பெறலாம் மேலும் மிக வேகமாக பகுப்பாய்வு செய்கின்றது எனவும் தமது கருத்துக்களை பலவிதமாக குறிப்பிட்டிருந்தனர். இதனடிப்படையில் தரவுகள் சேகரிப்பிற்கு நேரடியாகவே பதிலளிப்பது திருப்தியை தருகின்றது என 70.6% ஆனவர்களும் கூகிள் படிவங்கள் மூலம்

பதில் அளிப்பது திருப்தியை தருவதாக 29.4% ஆனவர்களும் குறிப்பிட்டிருந்தனர். எனவே கூகிள் படிவங்கள் மூலம் பதிலளிப்பதை விட நேரடியாகவே அவர்கள் பதிலளிப்பதை விரும்புவதை அடையாளப்படுத்த முடிந்தது. இதனை படம் 6 விபரிக்கின்றது.




படம் 6: பதிலளிப்பதில் திருப்தி

தற்காலத்தில் பல சிரமமான சூழ்நிலைகளின் காரணமாக கூகிள் படிவங்கள் மூலம் தமது தரவுகளை சேகரிப்பதும், அவ்வினாக்களை பூரணப்படுத்துவதும் கட்டாயமாகி விட்ட நிலையில் கூகிள் படிவங்கள் மூலம் பதிலளிப்பது பற்றிய திருப்தி நிலையை வினாக்கொத்தின் மூலம் வினவப்பட்ட போது 58.9% ஆனவர்கள் ஓரளவாக திருப்தி கொள்வதாகவும், 8.2% ஆனவர்கள் திருப்திகொள்ளவில்லை எனவும், 32.9% ஆனவர்கள் முழுமையாக திருப்திகொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தனர். இதனை பின்வரும் படம் 7 காட்டுகிறது.





படம் 7: கூகிள் படிவத்தில் பதிலளிப்பதில் திருப்தி


ISBN 978-624-5736-14-0

கூகிள் படிவங்கள் மூலம் கேட்கப்படும் வினாக்களுக்கு தரவுகளை, தகவல்களை கொடுக்க வேண்டியுள்ளது. ஆயினும் அதனை பூரணப்படுத்துபவர்களிடம் தாங்களுக்கு சிதந்திரமாக பதிலளிக்க முடிகிறதா என்ற அவர்களது மனநிலையை அறிந்த போது 68.9% ஆனவர்கள் ஆம் எனவும், 25.1% ஆனவர்கள் ஓரளவு எனவும் 6% இல்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். எனவே அதிகபட்சமானோர் சுதந்திரமாக பதிலளிக்க முடிகின்றது என குறிப்பிட்டிருந்தனர். அதனடிப்படையில் சுதந்திரமாகவும் தாம் நினைத்தது போன்றும் பதிலளிப்பவர்களுக்கு அதற்கான போதியளவு தெரிவுகள் (options) கூகிள் படிவங்களில் காணப்படுகின்றனவா என வினவப்பட்ட போது 49.8% ஆனவர்கள் ஆம் போதியளவான தெரிவுகள் உண்டு எனவும், 39.2% ஆனவர்கள் பதிலளிக்க ஓரளவான தெரிவுகள் உண்டு எனவும், 11.1% ஆனவர்கள் போதியளவானதாக இல்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர்.


கூகிள் படிவங்கள் மூலம் இன்றைய காலத்தில் தரவுகள் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக பெறப்படுகின்றன. எனவே அவை போதியளவான, நம்பகத்தன்மையான, உறுதியான தரவுகளாக இருக்க வேண்டும். அந்த வகையில் கூகிள் படிவங்கள் முழுமையாகவும், சரியாகவும் நிரப்ப முயற்சி செய்கின்றீர்களா என வினவப்பட்ட போது ஆம் என 88.9% ஆனோரும் 11.1% ஆனோர் ஓரளவு எனவும் பதிலளித்திருந்ததன் மூலம் ஏதாவதொரு வகையில் அனைவரும் முழுமையாகவும், சரியாகவும் கூகிள் படிவங்களை நிரப்ப முயற்சிக்கின்றனர் என்பது அறியப்பட்டது. அதனை கீழ்வரும் படம் 8 காட்டுகிறது.




படம் 8: சரியாக நிரப்புதல்


குறிப்பிட்டதொரு நாளில் பல கூகிள் படிவங்கள் பகிரப்படுகின்றன. இதன் மூலம் அவர்களிடம் தங்களுக்கு அனுப்பப்படும் அனைத்து கூகிள் படிவங்களையும் பூரணப்படுத்துகின்றீர்களா என வினவிய போது ஓரளவு அதாவது ஒரு சில கூகிள் படிவங்களை நிரப்புவதாக 45% ஆனவர்களும், ஆம் அனைத்து கூகிள் படிவங்களை பூரணப்படுத்துகின்றோம் என 44%

ஆனவர்களும், பூரணப்படுத்துவதேயில்லை என 11.1% ஆனவர்களும் குறிப்பிட்டிருந்தனர். இதனை பின்வரும் படம் 9 விபரிக்கின்றது.





படம் 9: அனைத்து கூகிள் படிவத்தையும் நிரப்புதல்

எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட 220 பேரிடம் கூகிள் படிவங்கள் பூரணப்படுத்துவதில் ஆர்வமாக அல்லது விருப்பமின்மையாகவா அல்லது பொடுபோக்காகவா செயற்படுகின்றீர் என அறிந்தபோது 70.3% ஆனோர் கூகிள் படிவங்களை ஆர்வமாகவே நிரப்புவதாக குறிப்பிட்டனர். ஆயினும் 12.3% ஆனோர் விருப்பமின்மையாகவும், 7.5% ஆனோர் பொடுபோக்காக கூகிள் படிவங்களினை நிரப்புவதாகவும் குறிப்பிட்டிருந்ததுடன் ஏனையவர்கள் ஓரளவு விருப்பத்துடனும், திருப்தி குறைவான மனநிலையுடனும் கூகிள் படிவங்களை நிரப்புவதாக குறிப்பிட்டிருந்தனர். அதேவேளை அவர்களது நண்பர்கள் கூகிள் படிவங்கள் நிரப்புவதில் எவ்வாறு செயற்படுகின்றனர் என அறிந்த போது 53.4% ஆனோர் ஆர்வமாகவே நிரப்புவதாகவும், 13% ஆனோர் கூகிள் படிவங்கள் நிரப்புவதில் விருப்பமின்மையாகவும், 25% ஆனோர் பொடுபோக்காகவும் உள்ளனர் என குறிப்பிட்டனர். இவற்றை படம் 10 மற்றும் 11 விபரிக்கின்றன.




படம் 10: கூகிள் படிவத்தை நிரப்புதல்


ISBN 978-624-5736-14-0




படம் 11: நண்பர்கள் கூகிள் படிவத்தை நிரப்புதல்

கூகிள் படிவங்கள் மூலம் தரவுகளை பெறுவது குறித்து இதற்கு முன்னர் கூகிள் படிவங்களை நிரப்பியுள்ளவர்களிடம் அவர்களது அபிப்பிராயம் பற்றி வினவிய போது நேர்மறையான சில அபிப்பிராயங்களும், எதிர்மறையான சில அபிப்பிராயங்களும் கிடைக்கப் பெற்றன. அவற்றில் நேர்மறையான அபிப்பிராயங்களாக கூகிள் படிவங்கள் மூலம் தரவுகள் சேகரிப்பது சிறந்த, நல்ல முறை, இலகுவான வழி, இலகுவாக வேலை முடியும், பயனுடையது, அவசர காலங்களுக்கு பொருத்தமானது, அதாவது தற்போதைய நிலைமைக்கு ஏற்றது, நேரமிகுதி போன்ற பல கருத்துக்களை கூறியிருந்ததுடன், எதிர்மறையான அபிப்பிராயங்களாக கூகிள் படிவங்களை பூரணப்படுத்துபவர்களது எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்த முடியாமை, உண்மைத் தன்மையின்மை, திருப்தி குறைவு, சிலர் ஈடுபாடு காட்டுவது குறைவு. போதியளவு தரவுகள் கிடைக்கும் என்பதில் சாத்தியப்பாடு இல்லை எனக்குறிப்பிட்டிருந்தனர்.

மேலும் அவதானத்தின அடிப்படையில், பலர் கூகிள் படிவங்களை நிரப்பாமல் விடுகின்றனர். எனவே அங்கு தரவுகள் போதியளவும், உண்மையான தரவுகளும் கிடைக்காத நிலை ஏற்படுகின்றது. எனவே கூகிள் படிவங்களை நிரப்பாமல் விடுவதற்கான காரணங்கள் பற்றி கேட்கப்பட்ட போது ஆர்வமின்மை, பொடுபோக்கு, கவனயீனம், சோம்பல், விருப்பமின்மை என ஒரு சிலரும் மற்றைய சிலர் கவரேஜ் பிரச்சினைகள் (Coverage Problems) மற்றும் நெரட்வர்க் பிரச்சினைகள் (Network Problems) இனை குறிப்பிட்டிருந்தனர்.

**முடிவுரையும் பரிந்துரைகளும்:**

பல்கலைக்கழக மாணவர்களில் கூகிள் படிவங்களை பூரணப்படுத்துவதில் அவர்களது மனநிலை தொடர்பான விடயதானங்களை ஆய்வுக்குட்படுத்திய இவ்வாய்வானது தரவு சேகரிப்பதில் கூகிள் படிவங்களானது சிறந்த வழி என்பதுடன் அவற்றின் மூலம்

நம்பகத்தன்மையான தரவுகள் கிடைக்கப்பெறுகின்றன என்பதனையும் கூகிள் படிவங்கள் மூலம் கிடைக்கப்பெறும் அத்தரவுகள் தமது நோக்கங்களுக்காக போதியளவாக கிடைக்கப்பெறுவதாகவும் குறிப்பிட்டிருந்தனர். மேலும் நேரடியாக தரவு சேகரிப்பதிலும், கூகிள் படிவங்கள் மூலம் தரவு சேகரிப்பதிலும் வேறுபாடுகளை உணர்ந்த அவர்கள் எவ்வகையான வேறுபாடுகளையும் உணர்ந்தனர் என்பதையும் இவ்வாய்வு அடையாளப்படுத்துகின்றது. அத்துடன் தரவு சேகரிப்பிற்கு கூகிள் படிவங்களை விட நேரடியான தரவு சேகரிப்பு முறையே அவர்களுக்கு திருப்தியளிப்பதாக குறிப்பிட்டிருந்தனர். ஆயினும் கூகிள் படிவங்களின் மூலம் சுதந்திரமாக பதிலளிக்க முடிவதாகவும், அவற்றின் மூலம் பதிலளிப்பதற்கு போதியளவான தெரிவுகள் (options) காணப்படுவதால் கூகிள் படிவங்கள் மூலம் பதிலளிப்பதில் திருப்திகொள்வதாகவும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.

ஆய்வு மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் கூகிள் படிவங்களை முழுமையாகவும், சரியாகவும் நிரப்ப முயற்சி செய்யும் அதேவேளை அவர்களுக்கு அனுப்பப்படும் அனைத்து கூகிள் படிவங்களையும் நிரப்புவதுடன் அவற்றில் அதிகமானோர் ஆர்வமாகவே நிரப்புகின்றனர். அதேவேளை விருப்பமின்மையுடனும் பொடுபோக்காகவும் செயற்படுகின்றவர்களும் உள்ளனர் என்பதை இவ்வாய்வு பிரஸ்தாபிக்கின்றது. மேலும், கூகிள் படிவங்கள் மூலம் தரவுகள் பெறுவது குறித்து அதிகமானோர் நல்ல அபிப்பிராயங்களையே கொண்டுள்ளதுடன் கூகிள் படிவங்களை நிரப்பாமல் விடுவதற்கான காரணங்களும் இவ்வாய்வின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

ஆக, இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய வகையிலான எளிய கேள்விகளையும் இலேசாக பதிலளிக்கக்கூடிய முறையினையும் கூகிள் படிவத்தில் ஏற்படுத்தல். தரவு சேகரிப்பாளர்கள், தமக்கு தேவையான தரவுகளுக்கு பதிலளிக்கக்கூடிய உரியவர்களுக்கு மாத்திரம் வினாக்கொத்தை கொடுத்தல். தரவு சேகரிப்பதற்தான சிறந்த வழிமுறையாக கூகிள் படிவங்கள் காணப்படுவதால் அதற்கு உண்மைத்தன்மையான, நம்பகத்தன்மையான தரவுகளை வழங்குமாறு வலியுறுத்தல்.

**உசாத்துணைகள்:**

*Custom themes on Google forms.* (2014). https://gsuiteupdates.googleblog.com/2014/09/custom-themes-in-google-forms.html.

Daino, Justin. (2017). *Google forms becomes more powerful w/new intelligent response validation, "check box grid" questions, more.* https://9to5google.com/2017/07/10/google-forms-becomes-more-powerful-w-new-intelligent-response-validation-check.

Eaton, S.E. (2011). How to Use Google Forms: A Step-by-Step Guide. *Social Media for Language Learning Online ConferenceSocial Media for Language Learning Online Conference.*

Fourie, Simona & Czuber-Dochan, Wladyslawa & Norton, Christine. (2019). *Using Google Forms in research on sensitive topics.* 10.13140/RG.2.2.19699.07203.

*Google Forms.* (n.d) https://en.m.wikipedia.org/wiki/Google_Forms.

*Google forms.* (n.d.). https://www.google.com/intl/ta/forms/about.

Mallette, Marla & Barone, Diane. (2013). On Using Google Forms. The Reading Teacher. 66. 10.1002/trtr.1169.

*More ways to build and share Google forms.* (2014). https://gsuiteupdates.googleblog.com/2014/09/more-ways-to-build-and-share-google.html.

Nguyen, Ha; Stehr, Eryn Michelle; Eisenreich, Heidi; and An, Tuyin (2018). Using Google Forms to Inform Teaching Practices. *Proceedings of the Interdisciplinary STEM Teaching and Learning Conference*: Vol. 2 , Article 10. DOI: 10.20429/stem.2018.020110.

Nirode, Wayne. (2018). *Collecting Simulation Data with Google Forms*. The Mathematics Teacher. 112. 67. 10.5951/mathteacher.112.1.0067.

Nurmahmudah, Endah; Nuryuniarti, Rissa. (2020). Google forms utilization for student satisfaction survey towards quality of service at Universitas Muhammadiyah Tasikmalaya. Journal of Physics: Conference Series, 1477 (2020) 022003, doi:10.1088/1742-6596/1477/2/022003.

Olajide, Victor. (2019). *Data Collection with Google Forms.* https://www.researchgate.net/publication/335147346_Data_Collection_with_Google.

Sari, Ermi Endah; Usman: Adbul Hakim. (2019). Effectiveness of using Google Forms in the problem based learning model to increase the critical thinking ability of high school students. *Advances in Social Science, Education and Humanities Research, volume 432. 2nd Educational Sciences International Conference (ESIC 2019)*

Sivakumar, R. (2019). Google forms in education. *Journal of Contemporary Educational Research and Innovations*. Vol.9, No.1, pp.35-39., February, 2019.